நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம்,
திண்டுக்கல்.
முன்னிலை: திரு. எஸ். பாக்கியராஜ், B.Sc., B.L.,
நீதித்துறை நடுவர் எண். 1
2026 ம் ஆண்டு ஏப்ரல் 17–ம் நாள் வெள்ளிக்கிழமை

**M.P.No.13/2026**

**in**

**STC.No.241/2025**

B. விக்னேஷ்,
த/பெ. லேட். பூபதி ... மனுதாரர்/எதிரி

//எதிராக //

V. தியாகராஜன்,
த/பெ. வெள்ளைச்சாமி ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

மனுதாரர்/எதிரி சார்பாக வழக்குரைஞர் திரு.K.N. குருசாமி அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர்/புகார்தாரர் சார்பாக வழக்குரைஞர் திரு.ரமேஸ் குமார் அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதமும் கேட்டும் ஆவணங்களை பரிசீலணை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்/ எதிரி தரப்பில் எதிரி, விக்னேஷ், புகார்தாரரின் மனைவி சாந்தி, எதிரியின் தாயார் ஹேமாவதி கிளை மேலாளர் இந்தியன் வங்கி, மைக்ரோஸ்டேட் கிளை, திண்டுக்கல் மற்றும் கிளை மேலாளர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி R.M. காலனி கிளை, திண்டுக்கல் மெயின் கிளை ஆகியோர்களை சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

மனுதாரர்/ எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், மனுதாரர் / எதிரிக்கும், புகார்தாருக்குமிடையே எவ்வித கொடுக்கல் வாங்கல் இல்லை என்பதற்கும், காசோலையை மனுதாரர் / எதிரி நேரடியாக புகார்தாருக்கு கொடுக்கவில்லை என்பதற்கு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் வாயிலாக நிரூபிக்க வேண்டியுள்ளது என்றும், மேலும் புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் மறுத்து கூறியுள்ளவற்றை நிரூபிக்க வேண்டியுள்ளதால் முதல் எதிரி தரப்பு சாட்சியாக புகார்தாரரின் மனைவி சாந்தியினை விசாரிக்க வேண்டியுள்ளது என்றும், மேலும், மனுதாரர் / எதிரியின் தாயாருக்கும், சாந்திக்கும் இடையே தான் கொடுக்கல், வாங்கல் உள்ளது என்றும், அவற்றையும் நிரூபிக்க சாண்றாவணங்களை காட்டி சாந்தியிடம் விசாரிக்க

வேண்டியுள்ளது என்றும், அடுத்த சாட்சியாக எதிரியின் தாயார் ஹேமாவதி என்பவரையும் விசாரணை செய்ய வேண்டியுள்ளது என்றும், புகார்தாரரின் மனைவி சாந்தி மற்றும் எதிரியின் தாயார் ஹேமாவதி ஆகிய மூவருக்கும் இடையேதான் கொடுக்கல் வாங்கல் நடந்துள்ளது என்றும், இதனை நிரூபிக்க கண்டிப்பாக சாந்தி மற்றும் ஹேமாவதி ஆகிய இருவரையும் சாட்சியாக விசாரிக்க வேண்டியுள்ளது என்றும், மேலும் இருவரின் வங்கி கணக்கில் பணம் வரவு வைத்தது தொடர்பாக இருவரின் வங்கி கிளை மேலாளரையும் விசாரிக்க வேண்டியுள்ளது என்றும், எதிரி விக்னேஷையும் சாட்சியாக விசாரிக்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பு எதிர் வாதம்**

எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில், இம்மனுவானது இந்த வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், புகார்தாரரின் மனைவி தவிர மற்ற சாட்சிகளை விசாரிப்பதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும் , எதற்காக புகார்தாரரின் மனைவியை விசாரிக்க வேண்டும் என தெரிவிக்கவே இல்லை எனவும், எதிரியின் தாயார் மற்றும் புகார்தாரரின் மனைவிக்கு வரவு செலவு இருப்பதை மெய்ப்பிதற்கு, எதிரியின் தாயாரை விசாரித்தாலே போதுமானதாகும். சட்டப்பிரிவு 353ன் கீழ் எதிரியை சாட்சியாக விசாரிக்க வேண்டுமெனில் தனது தரப்பு சாட்சியாக இருக்க விருப்பம் தெரிவித்து, அபிடவிட்டு தாக்கல் செய்ய வேண்டும் ஆனால் இம்மனுவுடன் எதிரி தரப்பில் அபிடவிட்டு எதும் இணைக்கப்படவில்லை என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3) தீர்மானிக்கப்படவேண்டியவை**

**மனுதாரர்கள் கோரியவாறு இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதுவே ஆகும்.**

மனுதாரர்/ எதிரி தரப்பில் எதிரி, விக்னேஷ், புகார்தாரரின் மனைவி சாந்தி, எதிரியின் தாயார் ஹேமாவதி, மேலும் இருவரின் வங்கி கணக்கில் பணம் வரவு வைத்தது தொடர்பாக இருவரின் வங்கி கிளை மேலாளர்கள் ஆகியோர்களை எதிரி தரப்பு சாட்சிகளாக விசாரணை செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது. வங்கி கணக்கு அறிக்கைகளை மனுதாரரே பெற்று தாக்கல் செய்ய இயலும், அவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வங்கியில் மறுக்கப்பட்டதாக காணப்படவில்லை. மனுவில் கண்ட 1,3,4 சாட்சிகளை விசாரணை செய்ய சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. எனவே, மனுவில் கண்ட 5 வது சாட்சியான எதிரி விக்னேஷ் மற்றும் எதிரியின் தாயாரான ஹேமாவதி ஆகியோரை எதிரி தரப்பு சாட்சியாக விசாரணை செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது. 1,3,4 சாட்சிகளை பொறுத்து இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

**இறுதியாக இம்மனுவானது பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு என்னால் இன்று **17.04.2026** அவை அறிய பகரப்பட்ட உத்தரவு.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.04.17 16:28:03 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.